# தினம் தினம் ஒரு திருமுறை

# DAILY A THIRUMURAI

அன்பே சிவம்
ANBE SIVAM

திருச்சிற்றம்பலம்

## பன்னிரண்டாம் திருமுறை

## பெரியபுராணம்



## பாயிரம் - திருமலைச் சருக்கம்

யாவராலும் அளத்தற்கரியதகவும், தொண்டும் உடையராகிய எண்ணிறந்த அடியவர்களின் திருத்தொண்டினைக் கூறுதற்கு ஒருப்பட்டயான், அதனை அளவிட்டுச் சொல்லும் ஆற்றலுடையேன் அல்லேனாயினும், அடியவனின் அளவுபடாத ஆசை உந்த, ஒருவாறு கூறத் தொடங்கினேன்.

**அளவி லாத பெருமைய ராகிய**
**அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்**
**அளவு கூட உரைப்பரி தாயினும்**
**அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்.05**



குறிப்புரை :

அளவு கூட - வரையறைப்படுத்திக் கூற. `காசில் கொற்றத்து இராமன் கதையினை ஆசை பற்றி அறை யலுற்றேன்`` (கம்ப. -சிறப்புப்பாயிரம் 4) என்பர் கம்பரும். குளிர்ந்த கடலருகே பெருகிவரும் ஊற்று நீரை முழுமையாக உண்டுவிடுவேன் எனும் பெருவிருப்புடைய ஒரு நாயை ஒத்த தன்மையுடைய யான், உயிர்களால் முழுமையாக அறிதற்கரிய பெருமை வாய்ந்த திருத்தொண்டர்களின் ஒப்பற்ற சிறப்புக்களை எடுத்துச் சொல்ல முற்படுகின்றேன்.

**தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர் தம்**
**பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்**
**பெருகு தெண்கடல் ஊற்றுண் பெருநசை**
**ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன். 06**

குறிப்புரை :

தகைமையேன் புகலலுற்றேன் எனக் கூட்டுக. கடலருகே உளதாய ஊற்று நீராதலின் அந்நீர்ப் பெருக்கு என்றும் வற்றாது என் பது விளங்கும். அவ்வாறு பெருகிவரும் அந்நீரை முழுமையாகப் பருகுதற்கு நினையும் ஒரு நாயை ஒத்தவன் என்பதால், தொண்டர்தம் பெருமையும், ஆசிரியரின் எளிவந்த தன்மையும் ஒருங்கு அறிதற்கு ஏதுவாகின்றது. நாய் நக்கிக் குடிக்கும் இயல்பினது. ஆதலின் பெருகி வரும் நீரை முழுமையாகக் குடிக்க இயலாததோடு, குடிக்கும் நீரும் சிறிது சிறிதாகவே அமையும். அதுபோலத் திருத்தொண்டர்தம் பெருமை நினைய நினையப் பெருகிவரும்

இயல்பினது. அதனை நான் முழுமையாகச் சொல்ல இயலாததோடு சொல்லுவதும் மிகச் சிறிதாகவே அமையும் என்பது கருத்து. அடியவர் திறம் ஆருயிர் களால் முற்ற அறிய இயலாது என்பதை நம்பியாரூரர்,

``இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன் அதற்கி யானார்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய் என்ன``
-தி. 12 சரு.1-5 பா.198

எனப் பின் கூறுமாற்றானும் அறியலாம்.

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றுஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதைஅரோ. -கம்பரா. சிறப்புப்பாயிரம்


62. முப்போதும் திருமேனி தீண்டுவார்கள் (பங்குனி - கடைசி நாள்)

எனவரும் கம்பர் திருவாக்கும் ஒப்பிட்டு உணர்தற்குரியதாம். நக்கிக் குடிக்கும் இயல்பினதாய நாயினைச் சேக்கிழார் கூற, அவ்வியல்பின தாய பூனையைக் கம்பர் கூறுகின்றார். கம்பர் கடலைக் கூற, சேக்கிழார் அதன்அருகே இருக்கும் ஊற்றைக் கூறியிருப்பது, தாம் எடுத்துக் கூறும் வரலாற்றருமையை மேலும் மிகுவிப்பதாகும்.
(shaivam.org, thevaaram.org)

திருச்சிற்றம்பலம்